தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 – 6611302
நிகரி: 0422 – 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 11-2-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**மாபெரும் கண்காட்சி மூலம் புத்ததக வாசிப்பு பழக்கத்தை மாணவர்களிடம் உருவாக்க வேளாண் பல்கலை தீவிரம்**

மாபெரும் புத்தகக் கண்காட்சி வேளாண் பல்கலை தொழில்நுட்பப் பூங்காவில் பிப்ரவரி 11, 2015 அன்று 9.30 மணிக்கு துணைவேந்தர் முனைவர். கு. ராமசாமி அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இணைய மற்றும் தகவல் தொழில்நுட்ப சாதனங்களால் புத்தகம் வாங்கிப் படிக்கும் ஆர்வம் மாணவர்களிடையே குறைந்து வருகிறது, இந்தப் போக்கை மாற்றி புத்தகம் வாசிப்பு மூலம் மாணவர்களின் மனதை ஒருமுகப்படுத்தவும் மன இறுக்கத்தை போக்கி இலகுவாக்கவும் புத்தாக்க முயற்சியாக அறிவியல், மேலாண்மை, கணிதம், தத்துவம், வினையியல், தகவல் தொழில்நுட்பம் போன்ற பல துறை சார்ந்த புத்தகங்கள் இக்கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. கோயம்புத்தூர், பெங்களூரு, சென்னை, கேரளா, புது தில்லி, மதுரை மற்றும் காரைக்குடி ஆகிய பகுதிகளிலிருந்து 29 புத்தக நிறுவனங்கள் பங்கு பெற்றுள்ளன.

நூலகத்தைத் தவறாமல் பயன்படுத்துபவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இளநிலை, முதுநிலை மற்றும் முனைவர் பட்டப்படிப்பு மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்த மாபெரும் கண்காட்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட தீவிர புத்தக வாசிப்பாளர்கள் பங்கேற்றனர். இந்த நிகழ்ச்சியை முனைவர். எச். பிலிப், வெளியீடு மற்றும் மக்கள் தொடர்பு தனி அலுவலர் அவர்கள் நூலக பணியாளர்களுடன் சேர்ந்து ஏற்பாடு செய்தார்.

மக்கள் தொடர்பு அலுவலர்